Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵
(1889)
ஆவணி மீ 28ல
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி:சதம் 10]

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி ௵ சித்திரை மீ ௨௰௨ வெள்ளிக்கிழமை (22 APRIL 1960) [இல-௩]

அரசியல் அலை

# ஆதிக்க மோகத்தால் அரசியற்கட்சிகள் ஆடும் ஆட்டம்!

## பத்து ஆட் பலத்துடன் ச. ச. க. தலைவரின் தத்துவப்!!

### பிலிப்புக் குழுவினர் கையிற் பிடி இருக்கின்றதா?

**ஒருவரை ஒருவர் விழுங்கும் காவு நெஞ்சம்படைத்த கட்சிகளாகும் ஐ. தே. கட்சி; சி. இ. சு. கட்சி ச. ச. கட்சி; பிலிப்புக்கட்சி; இப்பொழுது நடிக்கும் நாடகத்தை உலகம் இனி ஒருபொழுதும் காணமுடியாது!**

பாம்பு, கீரி, கருடன், பூனை, எலி என்ற இந்த வகையில் ஒன்றுக்கொன்று உயிர்ப் பகைமை பூண்ட கட்சிகள் ஒற்றுமையாய் அரசு நடத்துவதென்று சொன்னாலும் கேட்பவர்களுக்கு மதியில்லையா?

ஐ. தே. கட்சி ஆகாது என்பது உண்மை. அதை விலக்கி அரசு புரிய வரும் சி. இ. சு. கட்சி எப்படியானது? 1956 சித்திரை தொடக்கம் 1959 புரட்டாசி வரைக்கும் இக் கட்சியின் செயல்களை அறிந்த எந்த அரசியல் அறிஞனோ வாதியோ மாணுக்கனோ இக் கட்சி ஆட்சி புரிவதை ஆதரிப்பானா? இதுவும் கூடாது, அதுவும் கூடாதென்றால் செய்வதென்ன? -புதுத் தேர்தல் வைத்துப் பொதுசனத்தின் தீர்ப்பைப் பெறுவதுதான் ஒரே ஒரு வழியல்லவா?

**பிலிப்பின் பிடி முற்றுப்புள்ளி வைத்துவிட்டதா?**

பரமசத்துருவான பிலிப்புக்கட்சி ஐ. தே. கட்சியை விழுத்த விரும்பவில்லை. ஏன்? சுதந்தரக்கட்சி பதவியில் அமர்ந்துவிடும் என்பதே; ஆகவே, பாராளுமன்றத்தின் போக்கென்ன? 157 அங்கத்தவர்களில் ஒருவர் சபாநாயகர், ஒருவர் காலஞ்சென்றுவிட்டார். எனவே 155கொண்ட மன்றத்தில் 78 அங்கத்தவர்கள் ஒருங்குசேர்தல் வேண்டும். அதற்கு சுதந்தரக் கட்சியின் பலம் 46; என்றாலும், குருநாக்கல் அங்கத்தவர் கோட்டுக்குப் போக முடியாதென்று வைத்தியச் சான்றுகொடுத்தவர் ஆகையாற் சமூகம் அளிக்கமாட்டார். வத்தேகமப் பிரதிநிதி அழுத்தந்திருத்தமாய் எதிராக வெளுத்துவாங்கி விட்டார். எஞ்சிய தொகை 44. சமசமாசக்கட்சி 10. பொது உடைமைக்கட்சி 3. போசத் பண்டாரநாயக கட்சி 1. இராசரத்தினகட்சி 2. இன்னும் 21 அங்கத்தவர்களின் ஆதரவு வேண்டும். சமஷ்டிக்கட்சி 15-ம் தமிழ்க்காங்கிரசு 1-ம் தனிப்பட்டவர்கள் (வடக்கில் 2 ஆக 18. கிழக்கு மாகாண முஸ்லீம்களில் மூதூர், நிந்தாவூர் அங்கத்தவர்கள் இருவரும் ஐ. தே. க. ஆதரிப்பார்கள் என்பது வதந்தி. மட்டக்களப்பு 2-ம் அங்கத்தவர் ஐ. தே. கட்சியைச் சேர்ந்துவிட்டார். பொத்துவில் அங்கத்தவர் எதிர்க்கட்சியிற் சேர்ந்தாலும் தளம்பாத பலத்துடன் எதிர்க்கட்சி ஆட்சிபுரிய முடியுமா?

---

உ

### அகில இலங்கைச் சைவமகாநாடு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சார்வரி ௵ சித்திரை மீ ௧௭, ௧௮, ௧௯-ம் (29, 30-4-60, 1-5-60) நாட்களில் ஓர் அகில இலங்கைச் சைவ மகா நாடு நடத்தப்படும்.

காஞ்சி ஸ்ரீமத் க. வச்சிரவேலு முதலியார் B.A; L.T. அவர்களும், 'கலைமகள்' ஆசிரியர், ஸ்ரீமத். கி. வா. ஜகந்நாதன் M.A. அவர்களும் தலைமை வகித்து, சைவசமய விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். ஈழநாட்டுப் பேரறிஞர்களும் சைவமகாநாட்டிற் பங்குபற்றி, அரிய சைவசமய விரிவுரைகள் நிகழ்த்திச் சிறப்பிப்பார்கள்.

விரிவான நிகழ்ச்சி நிரல் பின்னர் வெளியிடப்படும்.

---

### நற்சிந்தனை

தேகம் விழுமுன்
செல்வத்துட் செல்வத்தை
அகத்துட் காண்டல்
அறிவென் பாரே.

போக போக்கியம்
எல்லாம் வீணென
யோக சமாதியி
லிருந்துணர் வாயே.

ஏக மாகிய
ஒன்றே எல்லாமாய்த்
தியாக மானது
சிந்தித் தறிநீ.

(சிவ தொண்டன்)

---

### போர்த்துக்கீசிய படைக்குப் போக்குவரத்து உரிமை இல்லையாம்

இடாமனிலிருந்து இடாட்ருநாகாஹாவெலி ஆகிய இடங்களுக்கு இந்தியா ஊடாய் மககளும் படைகளும் போக்குவரத்துச் செய்யும உரிமை தமக்கு உண்டென்று குறிப்பிட்டு அதை இந்தியா மறுக்கின்றதென்று குற்றஞ்சாட்டி உலக நீதிமன்றத்தில் போர்த்துக்கீசிய அரசாங்கம் இந்தியாவுக்கெதிராய் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. ஆனால் இந்தியாவுக்கூடாய்ப் படைகள் போக்குவரத்துச் செய்யும் உரிமை போர்த்துக்கீசிய அரசாங்கத்துக் கில்லை யென்றும் மக்கள் போக்குவரவு செய்வதில் எவ்வித குற்றத்தையும் இந்தியா செய்யவில்லை என்றும், உலக நீதிமன்றம் தீர்மானித்துள்ளது

---

## சமுதாயத்தின் எதிர்காலம்

### ஆசிரியர்கள் பொறுப்பிலுள்ளது

சமுதாயத்தின் எதிர்காலம் ஆசிரியர்களின் பொறுப்பிலே தான் தங்கியிருக்கின்றது. ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள வருங்கால மாணிக்கங்களாகிய சிறாரின் சூழ்நிலையை நன்கு தெரிந்துகொண்டால், கலவியிலும் ஒழுக்கத்திலும் சமயப் பண்பாட்டிலும் அவர்களைச் சிறந்தவர்களாகச் சிருஷ்டிக்கலாம். இந்தப் பொறுப்பு ஆசிரியர்களிடம் மாத்திரமன்றிப் பெற்றோரிடமும் நன்கு அமைந்திருக்கின்றது.

சைவசமயத்திற்காக அரும் பெருந் தொண்டாற்றிய ஆறுமுகநாவலரது நாட்டிலே அவர் பெயர் புனைந்த மண்டபத்திலே அவர் காட்டிய தூய நெறியிலே நின்று நான் பேசுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். நாம் இப்போது செய்யும் இந்தப் பிரசங்கம் என்ற செயலையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் அந்த மகானுவார். நாம் பிறரிடமிருந்து எதைக் கற்க வேண்டுமோ அதைக் கற்கவும் அவர் ஏற்பாடு செய்து வைத்தார்.

இன்றைய சூழ்நிலையில் உலகத்தில் குடிசனம் கூடிக்கொண்டு வருகிறது. விஞ்ஞானம் மேலோங்குகிறது. எனவே நாமும் நமது சமயக் கொள்கைகளைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

---

தமிழக வரலாறு (முன்னிதழ்த் தொடர்ச்சி)

## இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையிற் பல பண்டைக்காலத் தொடர்புகள்

### சீனவுக்குச் சென்று சீன மொழியில் நூல்கள் செய்தனர் இந்தியர்

### சீனி முதலிய பொருள்கள் சீனவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டன

**21. இந்தியாவும் சீனவும்**

சீனவுக்கும் இந்தியாவுக்கும் மிகப் பழங்காலம் முதல் உறவு இருந்து வந்தது. பட்டு சீனவுக்குரியதாக விருந்தது. பட்டைப் பற்றி மகாபாரதம் குறிப்பிடுகின்றது. பட்டுக்குச் சீனம் என்பதும் இன்னொரு பெயர். கீசகம் (மூங்கில்) சிந்தூரம் (செங்காவி) முதலிய சொற்கள் சீன மொழியிலிருந்து வந்தனவாகச் சொல்லப்படுகின்றன. வெள்ளைச் சர்க்கரை முற்காலத்தில் சீனவிலிருந்து வந்தமையால் அது "சீனி" எனப்பட்டது. அசோகர் காலம் முதல் இந்தியாவுக்கும் சீனவுக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்தது. பௌத்த தருமங்களைப் பரப்பும் போக்கினர் அக்காலத்திலிருந்து ஆயிரம் ஆண்டுகளாக மிகப் பல யாத்திரிகர்களும் அறி

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

ஞரும் இந்தியாவுக்கும் சீனவுக்கும் போக்குவரத்துச் செய்தார்கள். அவர்கள் இமய மலையையும் மத்திய ஆசியாவிலுள்ள மலைகளையும் தாண்டிக் கோபி வனாந்தரத்துக்கு ஊடாகப் பயணஞ் செய்தார்கள். இப் பயணங்களில் யாத்திரிகர்களிற் பெரும்பாலினர் மாண்டனர். ஒரு எல்லையிலிருந்து மறு எல்லையை அடைந்தவர்கள் மறுபடியும் தமது பிறந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லவில்லை. தாம் சென்ற நாட்டிலேயே தங்கி வாழ்ந்தார்கள். இந்தியாவிலிருந்து இந்துச்சீனம் யாவா சுமத்திரா மலாயா முதலியநாடுகள் வழியாகக் கடல்மார்க்கம் ஒன்று இருந்தது. தரை வழியாகச் சென்ற பிரயாணிகள் கடல் வழியாகமீண்டார்கள். பௌத்த மதமும் இந்தியப் பண்பாடும் மத்திய ஆசியாவிலும் இந்தோனேசியாவிலும் பரவியிருந்தன. அவ்விடங்களில் பல பௌத்த மடங்களும் மத போதனசாலைகளுமிருந்தன. சீனவுக்கும் இந்தியாவுக்கும் பயணஞ் செய்வோர் அம்மடங்களில் தங்கிச் சென்றனர்.

சீனவுக்குச் சென்ற இந்தியர் தம்மோடு பல சமஸ்கிருத பௌத்த நூல்களைக்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

**இந்துசாதனம்**

சார்வரி ஹூ சித்திரை மீ கo உ வெள்ளிக்கிழமை

## ஆட்சி உரிமை யாருக்கு?

நிலைமைக்கு ஏற்றபடி நியாயம் பேசுவது நீதியாகாது. பங்குனி பத்தொன்பதாம் நாள் இந்நாட்டு மக்கள் அளித்த தீர்ப்பு சிங்களம் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் மீண்டும் தேர்தல் நடைபெற வேண்டிய நிலைமையைக் கொண்டுவந்திருக்கின்றதென்பதை யாராவது மறுக்க முடியுமா?

மூன்றில் ஒரு பங்கு பலத்துடன் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி பெற முடியாது நிற்கின்றபொழுது அதிலும் குறைந்த அளவு ஆட்பலங்கொண்ட சிறீ இலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு ஆட்சி அமைக்க முடியும் என்பதைத் தலைவர்கள் நன்கு ஆராய்தல் அத்தியாவசியமாகின்றது. தனித்து இயங்காமல் சி. இ. சு. கட்சி ஏனைய எதிர்க் கட்சிகளுடன் கூட்டு ஆட்சி நடத்துவது யோசனையாயிருக்கின்றது. நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே தேர்தலில் நின்று பத்து அங்கத்தவர்கள் மட்டும் வெற்றி பெற்ற சமசமாசக் கட்சியும் மூவர் மாத்திரம் தோல்வியடையாதபொதுவுடைமைக் கட்சியும் இந்நாட்டின் அரசாங்கத்திற் பங்குபெறுவதானால் சனநாயக முறையின் விபரீதம் என்னே!

தமிழ்பேசும் மக்களின் நிலைமை இந்த ஆதிக்க ஆசைக் கப்பாற்பட்டது. தமிழ் மக்களின் மறுக்கப்பட முடியாத அடிப்படை உரிமைகளைப் பெறுவதாகிய ஓரே ஒரு நோக்கங் கொண்டதாயுள்ளது. இந்த உரிமைகளைப் பெற எந்தக் கட்சி தமிழ் பேசும் மக்களின் அங்கத்தவர்களுக்கு உதவியளிப்பார்கள் என்ற கேள்வியைப் பலவேறு முகமாக ஆராய்ந்து பார்த்தல் நன்று. மூன்றில் இருபங்கு ஆட்பலங்கொண்டே அரசியல் மாற்ற ஒழுங்குகள் செய்தல் வேண்டும் என்பது யாவருமறிந்த உண்மை. அத்தகைய ஆதரவு அளிப்பதற்குப் பாராளுமன்றத்தில் நூற்றொருவரின உதவி குறைந்த அளவுக்கு வேண்டும். வடக்குக் கிழக்குப் பகுதி அங்கத்தவர்கள் இருபத்து மூவருடன் இன்னும் எழுபத்தெண்மரின் ஒற்றுமை இருந்தாலன்றி உரிமை அளிக்கும் ஒழுங்குகள் சட்டப்படி தத்துவம் அடையமாட்டா. இந்த எழுபத்தெட்டு ஆதரவாளர்கள் யார் என்று கேட்கின்றோம். நாற்பத்தைந்து ஆட்பலங்கொண்ட சி. இ சு. கட்சி எந்த முறையிலே தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளைப் பெறும் ஒழுங்குகளை இயற்ற முடியும்?

சமசமாச அன்பர்கள் பதின் மரும பொதுவுடைமையினர் மூவரும் சேர்ந்து என்ன உதவி கொடுப்பார்கள். இதற்கிடையில் கிரு. இராசரத்தினவும் பாரியாரும கொண்ட கட்சிக்கு தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப்பற்றிய பேச்சு புண்ணிற் புளிபெய்தவாறு உள்ளத்தைப் பொங்க வைக்கும் என்பதை அன்னாரின் கூற்றிலிருந்தே அறிகின்றோம். இந்த நிலைமையிலே தமிழ்பேசும் மக்கள் சார்பாகப் பாராளு மன்றஞ் சென்றவர்கள் செய்வதென்ன? துர்ச்சனரைத் தூரத்தே விட்டு விலகுவது சான்றோர் முறை. களனிக் கரையிலே மாநாடு வைதது்க் கைவிட்டவர்களை நாடாது பொலனறுவையிலே பொல்லாங்கிழைத்தவர்களின் தலைமையைத் தேடாது 'ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையும்' நட்புரிமைக்குரியராகாதவர்களுக்குச் சார்பாகாது நடுநிற்பதே நெறி.

---

# ஐ. தே. கட்சி ஆட்சி தோல்வி அடைந்தது

## அறுபத்தொரு ஆதரவுக்கெதிராய் எண்பத்தாறு அங்கத்தவர்கள்

## இனி என்ன என்றதே கேள்வி?

பங்குனி (மார்ச்) 19ந் திகதி ஒரு முக்கியமான நாள். சித்திரை (ஏப்றில்) 19ந் திகதி மற்றொரு முக்கியமான நாளாயிற்று.

சிம்மாசனச் சொற்பொழிவுக்குரிய நன்றியுரை எதிர்க் கட்சியினரின் திருத்தப் பிரேரணையுடன் ஆரம்பமாயிற்று. அரசாங்கப் பொறுப்பை ஏற்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி போதிய பலம் வாய்ந்ததன்றென்பதே எதிர்க்கட்சியினரின் முக்கிய குற்றச்சாட்டாயமைந்துள்ளது. அக் காரணத்தால் ஐ தே க. அரசாங்கம் நம்பிக்கைக்குரியதன்றென்று சாதித்து நிற்கின்றனர். பலமற்ற ஒரு அரசாங்கத்தை நீக்கி மற்றொரு பலமற்ற அரசாங்கத்தையமைத்தல் விரும்பத்தக்கதன்றென்னும் கருத்தை எதிர்க்கட்சிகளுள்ளேயுள்ள மற்றொரு கட்சித் தலைவர் எடுத்துக் காட்டினர்.

தகுந்த நியாயங்காட்டி ஐக்கிய தேசியக்கட்சியைக் கண்டித்தவர்கள் எதிர்க்கட்சியினருள் சமஷ்டிக்கட்சியினரேயாவர். தமிழினத்தின் மூலாதார உரிமைகளுக்காகப் போராடுவதே சமஷ்டிக்கட்சியினரின் நோக்கமாகலின், தமிழ்மக்களின் துன்பத்தைக் குறிப்பாயெடுத்துக்காட்டுவதிலேயே அவர்கள் தங்கள் கருத்தைச் செலுத்தினுர்கள். கோப்பாய்ப்பிரதிநிதி திரு. எம். பாலசுந்தரம் பேசும் போது, ஆராய்வின்றியமைத்த ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தைத் தாங்கள் ஆதரியாமைக்குள்ள காரணங்களை விரித்து விளக்கினுர். தமிழ்மொழிக்கு உத்தியோக அந்தஸ்துக் கொடுக்க வேண்டுமென்பது பற்றிப் பேசும்போது அன்று ஸ்ரீ டி எஸ். சேனநாயக கொடுத்த வாக்குறுதியைக் குறிப்பிட்டு இன்று அவருடைய மகன் என்ன சொல்கின்றாரென்பதை அவர் அறிந்தாரானால் தமது கல்லறைக்குள்ளிருந்து புரண்டெழுந்து விடுவாரே என்று அதிசயக் குறிப்புடன் ஆர்ப்பரித்தார்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையோர் சென்ற தேர்தல் மூலம் தெரியச் செய்துள்ள சமஷ்டி ஆட்சி வேண்டுகோள் பற்றி எதுவும் சிம்மாசனச் சொற்பொழிவிற் குறிப்பிடாமை வருத்தத்துக்குரியதாயிற்று என்னும் திருத்தப் பிரேரணையை திரு. எஸ் ஜே. வி செல்வநாயகம் பிரேரித்தார். திரு என், ஆர். இராசவரோதயம் அதை அநுவதித்தார்.

சிம்மாசனச் சொற்பொழிவைத் தமிழ்மொழியிற் செய்யாது விட்டமை தமிழினத்தை அவமதிப்பதாகுமென்றும், தமிழினத்தின் மொழியுரிமையை முழுதாய்ப் பறித்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்குப் பிரசா உரிமை வாக்குரிமை ஆதியவற்றை மறுத்து நிற்கும் அதேசமயத்தில் தமிழ்மக்களின் மூலாதார உரிமைகளைப் பாதுகாத்தற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறுதல் மனிதஉரிமைக் கொள்கையைப் பரிகாசஞ் செய்வதாயமைகின்றதென்று வைத்தியகலாநிதி ஈ. எம். வி. நாகநாதன் மற்றொரு திருத்தத்தைத் பிரேரித்தார்.

x x x

**[எதிர்க்கட்சியினர் ஒருங்கு சேர்ந்து கொணர்ந்த திருத்தப் பிரேரணை 25 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. ஆட்சிக்கட்சிக்கு 61. எதிர்ப்பு 86. வாக்களிக்களிக் காதவர் 8, திருத்தப்பட்ட பிரேரணை சார்பாக 93. 61 எதிர்ப்பு. 1 வாக்களிக்கவில்லை.]**

---

## உள்ளத்துக்கு உவகை அறிவுக்குப் பெருவிருந்து

### இந்துக் கல்லூரிக் கண்காட்சிக் களியாட்டுவிழாச் சிறப்பு

பூலோக சுவர்க்கம் தானோ அன்றி இராவணன் ஆண்ட இலங்கை தானோ என்றையுற்றுக் களிப்புறும் வகையில், பல நிற மின்சார வெளிச்சங்களால் அலங்கரிக்கப் பெற்று, மக்களைக் கவருகிறது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் களியாட்டு விழா மைதானம். அங்கே செல்வீர்களேயானல், 'மெரிகோரவுண்' டிலும் வேறு பலவற்றிலும் உல்லாசமாகப் பொழுதைப் போக்கலாம். "சர்க்கஸ்" விளையாட்டையும், பாதாளக் கிணற்றிலே பயங்கரச் "சயிக்கிள்" ஓட்டத்தையும் கண்டுகளிக்கலாம் நாவிற்கினிய அறுசுவைச் சிற்றுண்டி. அனைவரையும் அழைக்கின்றது.

இவைகளுக்கு அப்பால் ஆசிரியர் மாணவர்களின் கை வண்ணத்தையும், அறிவு நுட்பத்தையும் எடுத்துக்காட்டும் பொருட் காட்சி [illegible] பந்தமான கலைக் கண்காட்சி. அந்தரத்தில் பறக்கும் பந்து, கனல்கக்கும் எரிமலை! இன்னும் எத்தனை எத்தனையோ விந்தைகள்! மேற்படி கல்லூரியின் களியாட்டு விழாவிலும் பொருட் காட்சியிலும் காணக்கூடிய விந்தையை நோக்கும் போது, பண்டைக்காலத்தில் புராணேதிகாசங்களிற் கூறப்பட்ட அற்புதங்கள் உண்மையென நம்பக்கூடியதாயிருக்கிறது.

மக்கள் உள்ளத்திற்கு உவகையூட்டும் களியாட்ட விழாவினையும், அறிவுக்கு நல்விருந்தளிக்கும் பொருட் காட்சியினையும், ஜூபிலி, பட்டதாரி வகுப்பு கட்டட நிதிக்காக அறிஞர்கள் நடத்துகிறார்கள். 'அரிசிப் பொரியொடு திருவாரூர்' என்ற முதுமொழிக்கிணங்க மக்களுக்கு அறிவையும் ஆனந்தத்தையும் அளித்து, வருங்காலப் பட்டதாரிகளை ஆக்கும் நோக்கத்துடன் இதை நடத்துகிறார்கள்.

'வித்தியாதானம் எல்லாத் தானங்களிலும் சிறந்தது', அன்னசத்திரம் முதலியன கட்டுவதிலும் ஓர் ஏழைக்கெழுத்தறிவித்தல் சிறந்த புண்ணியம் எனப் பாரதியார் கூறுகின்றார்.

ஆகவே, நாம் இந்துக் கல்லூரி நடாத்தும் பொருட்காட்சி, களியாட்டு விழாவில் கலந்துகொள்வதின் மூலம் வித்தியாதான உதவி செய்தவர்களாவோம்.

வளர்க! உயர்தரக்கல்வி!!

யா. இ. க. பழைய மாணவன்

---

### ஸ்ரீ நடராஜப்பெருமான் உற்சவமூர்த்தி பிரதிஷ்டை

கொள்ளிடம். ஏப் 11 திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21வது குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடை மருதூர் ஸ்ரீ. மகாலிங்கசுவாமி தேவாலயத்தில் ஸ்ரீ. நடராஜப்பெருமான் உற்சவர் (பெருவடிவத்தில்) புதிதாகச் செய்து 10-ம் தேதி காலை சென்னை ராஜ்ய அறநிலைய ஆணையாளர் திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை ஐ ஏ எஸ். அவர்கள் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார்கள்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

---

### சிவபதப்பிராப்தி

ஊரெழு ஸ்ரீலஸ்ரீ. சதாசிவக் குருக்கள் அவர்களின் பத்தினியும், ச. சோமசுந்தரக்குருக்கள், ச. பாலசுந்தரக்குருக்கள ஆகிய இவர்களின் தாயாரும் ஆகிய ஸ்ரீமதி. வாலாம்பிகையம்மா, நிகழும் சார்வரி வருடம் சித்திரை மாசம் 17 – 4 – 60க்குச் சரியான 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பிராஹ்மீ முகூர்த்தத்தில் சிவபதமடைந்த செய்தியை அனைவர்க்கும் அறியத்தருகிறோம். அவவின் அந்திய கடமைகள் மறுநாள் திங்கட்கிழமை பகல் ஒரு மணியளவில் சுற்றமித்திர புத்திர அன்பர்களுடன் வெகு சிறப்பாக நடந்தன, அவவின் ஆத்மா சாந்தியாகும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ச. பாலசுந்தரக்குருக்கள்.
M 9 22—4—60.

---

நேயர்கள் நெஞ்சம்

### சைவபரிபாலன சபைக்கு நூல்நிலையம்

இந்நாட்டில் மிகுந்த பழைமையுடன் தனிமிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்து நிலையங்களுள் ஒன்றாகிய சைவபரிபாலன சபையானது தகுதிவாய்ந்த நூல்நிலையமொன்றை யுடையதாயிருத்தல் பெரிதும் விரும்பவேண்டியதாகும். அப்படி ஒன்றை அமைப்பதற்குச் சபையார் வேண்டிய செயலாற்றுவார்களென்றும், அம் முயற்சிக்கு இந்துக்கள் முழு ஆதரவு கொடுப்பார்களென்றும் நம்புகின்றேன்.

இந்நாட்டு இந்துக்களின் பொருட்டு, பிற தொண்டுகளுடன் இந்த ஆத்மீக பண்பாட்டுச் சேவையும் இப்புத்தாண்டிற் செய்யப்படுதல் விரும்பப்படுகின்றது.

சு. சிவசுப்பிரமணியம்,
கொழும்பு
12 - 4 - 60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பஞ்சாக்ஷர விநாயகப் பெருமான்

## எடுத்தணி வயலில் சிறந்த திருக்கோயில் அமைப்பு

### திருவாவடுதுறை ஆதீனத்தின் திருத்தொண்டு

கொள்ளிடம். மார் 31

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது பட்டம் குருமகா சந்நிதானம் தவப்பெருந்திரு, சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நக்ஷத்திர விழாவும், ஸ்ரீ பஞ்சாக்ஷர விநாயகப் பெருமானின் இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும் நேற்று ஆதீனத்திற்குச் சொந்தமான எடுத்தணி வயல் கிராமத்தில் சிறந்த முறையில நடைபெற்றன.

விழாவை முன்னிட்டு கிராமம் நன்கு மாவிலை தோரணங்களாலும், விசேஷ மின்சார தீபங்களாலும அலங்கரிக்கப் பட்டிருந்தது.

காலையில் ஸ்ரீ பஞ்சாக்ஷர விநாயகப் பெருமானுக்கு வேத பாராயணம், திருமுறைப் பாராயணம், பிரபல நாதசுர வித்துவான் காருகுரிச்சி திரு. அருணாசலம், ஆதீன வித்துவான் கிளாரினெட் எவரஸ்ட்டு திருச்சி திரு. எ. கே. சி. நடராசன் குழுவினர்களின் வாத்திய முழக்கத்துடனும் மகா உருத்திராபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன

விழாக்களுக்கு தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த பிரமுகர்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும் அருட்பிரசாதங்களைத் தவப் பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கினார்கள்.

**பிரமுகருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பு**

தவப்பெருந்திரு குருமகா சந்நிதானம் அவர்கள் கிராமத்தின் அண்மையிலுள்ள பண்ணைவயல் பிரமுக இளைஞரான திரு சுந்தரராசன் சேர்வைகாரருக்கு ஸ்ரீ விநாயகப்பெருமான் சன்னிதியின் முன்பாக, பொன்னாடை போர்த்து மாலைசூட்டி அருட் பிரசாதம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

பின்னர் தவப்பெருந்திரு குருமகா சந்நிதானம் அவர்கள் மகேசுவர பூசையும், ஏராளமான ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பும் செய்து வைத்தார்கள்

**நினைவு மலர் வெளியீடு**

ஆதீன மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது என்ற நூலுக்கு தவப்பெருந்திரு குருமகா சந்நிதானம் அவர்கள் ஆதீன வித்துவான் "சித்தாந்த சைவமணி" கும்பகோணம் திரு த.ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளையைக்கொண்டு குறிப்புக்கட்டுரை, ஆராய்ச்சி முகவுரை நூலின் பொருட் சுவை ஆதியவை எழுதி அச்சிட்டு ஜன்ம நக்ஷத்திர விழாவின் நினைவாய் 139-வது மலராக வெளியீடு செய்து எல்லோருக்கும் நூலை இலவசமாக வழங்கியுள்ளார்கள்

**பிரபல வித்துவான்கள் மூவரின் கச்சேரிகள்**

விசேஷ மின்சார தீப அலங்காரங்களுடன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் இரவு 7 மணி முதல் 9 மணிவரையில் ஆதீன பிரதம சங்கீத வித்துவானும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இசைக் கல்லூரியின் முதல்வருமான "இசையரசு" திரு எம். எம் தண்டபாணிதேசிகரின் கச்சேரியும், இரவு 9 மணி முதல் 11 மணிவரையில் பிரபல நாதசுர வித்துவான் காருகுரிச்சி திரு. அருணாசலம் குழுவினர்கள், நாதசுரக் கச்சேரியும் பிரபல தவில் வித்துவான் திரு. ராகவப் பிள்ளையின் தனித்தவிலுடன் நடைபெற்றன. பின்னர் இரவு 11 மணிமுதல் 1 மணி வரையில் ஆதீனவித்துவான் 'கிளாரினெட் எவரெஸ்ட்டு" திருச்சி திரு. ஏ. கே. சி. நடராசன் குழுவினர்களின் கச்சேரியும் நடைபெற்றது.

இப்பகுதியிலுள்ள சுமார் 5 மைல் சுற்றுவட்டார மக்கள் வந்து இரவு முழுதும் கச்சேரிகளைக்கேட்டு மகிழ்ந்தனர். மேலும் இந்தச் சுற்று வட்டாரத்தில் எவ்விதமான விழாக்களும் நடைபெற்று வருவதற்குவேண்டியகோயில்கள் இல்லாமலிருப்பதால் தவப்பெருந்திரு குருமகா சந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா 1956ம் ஆண்டிலிருந்து இங்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருவதை சுமார் 5 மைல் சுற்றுவட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து கூடி ஆண்டுதோறும் பெரும் திருவிழாவாகவே மகிழ்ந்து வருகின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று இரவு இசையரசு திரு. எம் எம். தண்டபாணி தேசிகரின் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் பிரமுகர் பண்ணைவயல் திரு. சுந்தரராசசேர்வை அவர்கள் எழுந்து திரு. தேசிகர் அவர்களிடம், நீங்கள் திருவாவடுதுறை ஆதீனத்தை எங்கள் ஆதீனம் என்று எவ்வாறு கூறுகின்றீர்களோ அவ்வாறே இப்பகுதயிலுள்ள மக்கள் அனைவரும் ஆதீனத்தைச் சார்ந்த சீடர்கள் என்றும், ஆதீனத்திற்கு நான் செல்லப் பிள்ளையைப்போலிருந்து வருகின்றேன் என்றும் கூறி திரு. தேசிகர் அவர்களுக்கு மாலைசூட்டிப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்.

திரு தேசிகரின் கச்சேரி முடிந்தவுடன் ஆதீன[illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## திருக்கேதீச்சர ஆலயம்- அலங்காரோத்சவ விழா

### சார்வரி வருஷம் சித்திரை மாதம் 13ம் திகதி தொடக்கம் 28 ம் திகதி வரைக்கும் (25-4 60 — 10-5-60)

நிகழும் சார்வரி வருடம் சித்திரை மாதம் 13ம் திகதி (25-4-60) திங்கட்கிழமை தொடக்கம் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாத சுவாமி திருவருளை முன்னிட்டு திருக்கேதீச்சர ஆலயத்தில் விசேட நவகலச ஸ்நபன அபிஷேக பூசை வைபவங்களுடன் அலங்காரோத்சவ விழா ஆரம்பமாகும். அன்று ஈழத்தின் இரு கண்களில் ஒன்றாய் விளங்கும் கோணேச்சரப் பெருமானின் "பாவநாசக" தீர்த்தத்தைத் திருக்கோணமலைச் சைவ அடியார்கள் பக்தி பூர்வமான ஆராதனைகளுடன் திருக்கேதீச்சரம் கொண்டு வந்து கௌரி சமேத கேதீச்சர நாதருக்கு அபிஷேகம் செய்விப்பார்கள். இரவு கௌரியம்பாள் திருக்கேதீச்சரநாத ஸ்வாமி ரிஷப வாகனத் திரு உலாக் காட்சி நடைபெறும். தொடர்ந்து வரும் பதினைந்து தினங்களுக்கும் ஷை பூஜா அபிஷேகம், அலங்காரோத்ச விழா நடத்தத் திருவருள் துணை செய்திருக்கின்றது.

இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் சிவனடியார்களும், அன்பர்களும்திருவிழா நாட்களில் திருக்கேதீச்சரம் வந்து கௌரிநாயகி சமேத கேதீச்சரநாதரைத் தரிசித்து திருவோலக்கத் திருவிழாப் பொலிவில் நிறைவுற்றுத் திருவருட் பிரசாதம் பெற்று ஏகுமாறு வேண்டுகின்றோம்.

உபயங்களின் விபரம்:

ஆரம்ப பூசை வாஸ்துசாந்தி முதலியன: சித்திரை 12 ஞாயிறு (24-4-60) திருக்கேதீச்சர ஆலய பஞ்சாயம்.

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

## அணிந்துரை அரங்கம்

**உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தர் பிரமஸ்ரீ அ. வைத்தீஸ்வரக் குருக்களவர்களின் ஞாபகவெளியீடு**

மேற்படி ஆலய சிவநாமக் குழுவினரால் வெளியிடப் பெற்றது.

இலவசவெளியீடு

ஆசிரியர், திரு. பஞ்சாட்சரம்
உரும்பராய் மேற்கு
உரும்பராய்

என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குருக்களவர்களின் வாழ்க்கைச் சிறப்புக்கள்பற்றி அன்பர்கள் நால்வர் எழுதிய கட்டுரைகளுடன், தோத்திரப் பாடல்களுஞ் சேர்த்து வெளியிடப்பெற்ற இது சைவத் தொண்டர்கள் யாவர்க்கும் பொதுவாகவும் பெருநெறியில் நின்று வாழவிழையும் அந்தணருக்குச் சிறப்பாகவும் நல்ல வழிகாட்டியாயுதவுமென்று கருதுகின்றோம். குருக்களவர்களின் வாழ்க்கை பெரும் பாராட்டுக்குரிய தொன்றாய்க் காணவருதலின் குறித்த கட்டுரைகளுள் முதலிற் காணவருவதை இங்கே தருகின்றோம். இத்துடன் ஏனைய கட்டுரைகளுஞ் சேர்ந்து குருக்களவர்களின் சிறப்புக்களை நன்கு சித்திரித்து விளக்குகின்றன.

**கருணாகரன் பாதமே கதியெனக்காட்டிய மாண்பு**

உரும்பராயில், பல்வகைச் சிறப்பும் மிக்கது கருணாகரப் பிள்ளையார்கோயில். அவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் உழைத்துவந்த பெரியார், பிரமஸ்ரீ அ. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் அவர் தோன்றும்பொழுதே புகழோடு தோன்றினார். அவரைப் புகழ்தேடி அடைந்தது எனின் மிகையாகாது. அவர்கள் சாதாரணமாக ஒரு பிராமணர் என்னும் நிலையில்மட்டும் வைத்து எண்ணப்படக் கூடியவரல்லர், சகல கலைகளையும் நன்கு கற்றறிந்த வேதாகம சைவத்தமிழ்ப்பண்டிதர் என்றே கூறிவிடலாம்.

சைவப் பெருமக்கள் நிறைந்து வாழும் நமது ஊர்க்குப் பெருமை தந்துகொண்டிருக்கும் ஆலயங்களுள் ஸ்ரீ கருணாகரப்பெருமான ஆலயம், பழமையும், புதுமையும் பிரசித்தியும் பெற்றதாகும். இதற்கு எல்லாம் மூல புருஷராக விளங்கியவர் சிவனடி சேர்ந்த நமது குருக்கள் ஐயா அவர்களே.

நாம்கருணாகரப்பிள்ளையார் கோயிலுக்குப் போனதும் எங்களை அறியாமலே பல வழிச்செல்லும் எங்கள்குரங்கு மனம் ஒரு வழிப்பட்டு, கருணாகரன் பாதமே கதியென ஒடுங்கி விடுகிறது. உலகமாயைகள் பலவற்றிலும் அழுந்தும் நம் மனம் ஆலயத்துட் சென்றதும் நன்னிலைப்படுதற்குரிய வசியம் ஏதோ ஒன்று இருந்தேயாகவேண்டும். அந்த வசியம் பிரமஸ்ரீ அ. வைத்தீஸ்வரக்குருக்கள்தான். அங்கே அடியார்கள் வழிபடும் முறையும ஐயா அவர்கள் அர்ச்சிக்கும் முறையும் சிறப்பாக அமையும். ஐயா அவர்கள் எவ்வித அவசியமான புறவேலைகள் இருப்பினும் அவற்றுக்காக இந்தக் காலத்தில் வாழும் ஒரு சில அர்ச்சகர்களைப்போல் அரைகுறையாகச் செய்யும் தன்மையை யாம் அவர்களிடம் கண்டிலேம். அவர்கள் பக்திநிறைந்த பண்பட்ட பூசை முறை அடியார்கள் எல்லோரையும் பக்திக் கடலில்ஆழ்த்திவிடும். பூசை நடைபெறும் நேரங்களில் குருக்கள்ஐயா அவர்கள் வாயிலாக - அவர்களை ஒரு வழி காட்டியாக வைதது கருணாகரனின் சுய தன்மைகளையெல்லாம் கண்குளிரக் காண்பதாகவே இருக்கும். குருக்கள் ஐயா அவர்கள் எமக்கு ஒரு சமய ஆறு.

ஆலயங்களில் நடைபெறும் விசேட உற்சவங்கள், புராணப்படிப்பு முதலியவிசேடங்களையும் உரிய நன்முறைகளைக் கையாண்டே செய்வார்கள். விதிமுறைகளில் இருந்து சற்றேனும் விலகமாட்டார்கள். மற்றவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் பாசாங்குக்குக் கோயிற் கருமங்களை நடாத்தும் வழக்கம் இல்லவே இல்லை.

எந்தக்கருமத்தையும் என்ன என்ன ஒழுங்கு முறைபற்றிச் செய்யவேண்டுமோ அந்த நெறிபற்றியே செய்ய வேண்டும் என்று அடிக்கடி சொல்வார்கள் தமது சொற்களைச் செயலிலே காட்டத் தவறார்கள். பின்னிடார்கள்.

ஆலயங்களில் சைவ அன்பர்கள் சேர்ந்து கூட்டுப்பிரார்த்தனை நடத்தும் முறை சில ஆண்டுகளாகவே ஈழநாட்டின் பல பாகங்களிலும தோன்றியுள்ளது. ஆயின் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் கூட்டுப்பிரார்த்தனையை அடிப்படையாகக் கொண்ட சிவநாமப் பஜனை மிக நீண்டகாலமாய் நடைபெற்று வருகிறது. எத்தனையோ இடங்களில் இப்பஜனை தோன்றி மறைந்ததுண்டு. ஆயின் நான் அறிந்தவரை இப்பஜனை அரை நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து தவறாமல் வெள்ளிக்கிழமை மாலைநேரங்களில் நடைபெற்று வருகிறது இதற்கு மறைமுகமான தூண்டுகோலாய் அமைந்தவர் ஐயா அவர்கள். ஐயாவின் ஒழுங்கான பண்பட்ட பூசை முறையே எல்லோரையும் கவர்ந்தது. இதன் வளர்ச்சிக்கும் ஐயா அவர்கள் செய்த தொண்டுகள் பல.

தமது தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்பாராது ஏதாவது குறைகள் நேரிடின் ஒருவாறு தாங்கிக் கொள்வார். ஆயின் கருணாகரப்பிள்ளையார் ஆலயவளர்ச்சியில் சிறுகுறை தோன்றினும் அதைத் தாங்க மாட்டார்கள். ஐயா விடும் ஒவ்வொரு மூச்சும கருணாகரப் பெருமானின் மூச்சாகவே இருக்கும். இந்த வருடத் திருவாதிரையிலேகூட நோய் வாய்ப்பட்டிருந்தும் செய்த தொண்டில் தவறக்கூடாதென்னும் நோக்கத்தாற் போலும் சில செய்யுள்களுக்குப் பயன் சொன்னார்கள். அவர்கள் பயன் சொல்லும்போது என்போன்ற சிலர் வாசிக்கும் பாக்கியத்தைப் பெற்றனர்.

அவர்கள்காலத்தில் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோயில் எப்படிவளர்ச்சியடைந்ததோ அவ்வளர்ச்சி தடைபடாமல் மேன்மேலும் வளர்ச்சியடையச் செய்வது குருக்கள் ஐயாவின் புத்திரர்களதும் எங்களதும் கடமையாகும், அதுதான் அவர் ஆன்ம சாந்தியடைய நாம் செய்யும்பெருந் தொண்டாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயம் அலங்காரோத்சவம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

1ம் திருவிழா சித்திரை 13 திங்கள் (25 4-60) திருக்கோணமலைச் சைவ அடியார்கள்.

2 ம் திருவிழா சித்திரை 14 செவ்வாய் (26-4-60) மட்டக்களப்புச் சைவ அடியார்கள்.

3 ம் திருவிழா சித்திரை 15 புதன் (27.4.60) மத்திய மாகாண சைவ மகாசபை கண்டி.

4 ம் திருவிழா சித்திரை 16 வியாழன் (28-4-60 இந்துக்கல்லூரி, காரைநகர், யாழ்நகர்க் கல்லூரி, காரைநகர்.

5 ம் திருவிழா சித்திரை 17 வெள்ளி (29.4.60) இந்துக்கல்லூரி சித்தங்கேணி, வட்டுக்கோ.

6 ம் திருவிழா சித்திரை 18 சனி (30-4.60) இந்துக்கல்லூரி கொழும்பு.

7 ம் திருவிழா சித்திரை 19 ஞாயிறு (1-5-60) வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

8 ம் திருவிழா சித்திரை 20 திங்கள் (2-5-60) நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் (நகரத்தார்) கொழும்பு.

9 ம் திருவிழா சித்திரை 21 செவ்வாய் (3-5-60) இந்துக்கல் கல்லூரி கொக்குவில்.

10 ம் திருவிழா சித்திரை 22 புதன் (4-5-60) சைவமங்கையர் வித்தியாலயம். கொழும்பு

11 ம் திருவிழா சித்திரை 23 வியாழன் (5 5-60) மகாஜனக்கல்லூரி தெல்லிப்பளை.

12 ம் திருவிழா சித்திரை 24 வெள்ளி (6-5-60) கந்தசாமி வித்தியாலயமும், பாக்கிய வித்தியாலயமும். மாத்தளை.

13 ம் திருவிழா சித்திரை 25 சனி (7.5 60 இந்துக்கல்லூரி, மானிப்பாய்.

14ம் திருவிழா சித்திரை 26 ஞாயிறு (8-5-60) இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.

15 ம் திருவிழா சித்திரை 27 திங்கள் (9.5-60) பரமேஸ்வரக் கல்லூரி திருநெல்வேலி.

16 ம் திருவிழா சித்திரை 28 செவ்வாய் (10-5-60) பகல் - தீர்த்தம்: மன்னார் மாந்தை சைவ அடியார்கள். இரவு - பூங்கா திருவிழா - இந்துக்கல்லூரி உரும்பிராய்.

திருக்கேதீச்சர ஆலயப் பஞ்சாயத்தாருக்காக சேர். கந்தையா வைத்தியநாதன் (தலைவர்) அவர்களும் திரு. வி. அல்லிராசா (காரியதரிசி) அவர்களும் மேற்கண்டவாறு அறியத்தந்துள்ளனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B/2828

ஐயம்பிள்ளை இராமனாதன் சரவணை
—வழக்காளி.

எதிராக:

1. இளையதம்பி வைத்திலிங்கம்
2. பெண் அன்னலட்சுமி வேலணை மேற்கு வேலணை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் கோட்டின் M.B/2828-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஈட்டுறுதியினுரித்தை 1960-ம் ஞு வைகாசிமீ 28 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்த யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு வீட்டில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபாய் 1270-ம் 25-6-59 தொடக்கம் 22-12-59 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைகும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 205-97.

ஆதன விபரம்

1953-ம் ஆண்டு சித்திரைமாதம் 22-ந்திகதி 27435-ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு கா. விநாசித்தம்பியினால் முடிக்கப்பட்ட ஈட்டுறுதியின் பெயரால் எதிராளிக்குள்ள சகல நயம் உரித்துச் சோந்தை முழுவதையும் ஆதனம் அதாவது வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை 'வழுக்கல் கலடும், கயததனைக் கலடும்'' நெற்பரப்பு 25. எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் சின்னம்மாவிற்கும் இளையதம்பி பொன்னையாவிற்கு முரிய வாதனங்கள். வடக்கு வைரமுத்து நடராசாவிற் குரிய வாதனம் மேற்கு தாமோதரம்பிள்ளை கந்தையாவிற்கும், கணபதிப்பிள்ளை கந்தையாவிற்கு முரிய வாதனங்கள். தெற்கு கணபதிப்பிள்ளை கந்தையாவிற்கும் தம்பையா அருணாசலத்திற்கும் சேதுபதி கந்தையா விற்கு முரிய வாதனங்கள்.

A. S Rajendiram,
கொம்மிஷனர்&விலை மதிப்பாளர்,
M 7 22-4-60.


நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி எம் சாமி

# தங்கபஸ்பம்

உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை. இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை. கபக்கட்டு. பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனம்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.


## கல்வித்துறை மொழி அநீதி குறைக்கப்படுகின்றது

வெளிநாட்டு அரசாங்கக் கல்வி உதவிப் பணம் பெறுவோர் சிங்கள மொழி அறிவுடையராயிருத்தல் வேண்டுமென்ற கட்டுப்பாட்டைப் புதிய கல்விமந்திரி நீக்குகின்றார். இத் தீர்மானத்தின்படி அவுஸ்திரேலிய செக்கோசிலவாக்கிய அரசாங்கங்கள் தரவந்துள்ள விஞ்ஞான தொழில் நுட்பக்கல்வி உதவியைப் பெறும் மாணவர் சிங்களம் அல்லது தமிழ் அறிவுடையராயிருக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் வழக்குகள்

தேர்தல் வழக்குகளும் சமர்ப்பிக்கப்படலாயின. இவற்றுள் ஒன்று யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஏ ரி. துரையப்பா அவர்களின் தெரிவை ஆட்சேபிப்பதாகும்.

## ஸ்ரீ பஞ்சாக்ஷர விநாயகப்பெருமான்

3-ம் பககத் தொடர்ச்சி

ஷராப் திரு. சங்கரப்பிள்ளை மதிப்பிற்குரிய பண்ணைவயல் திரு. சுந்தரராச சேர்வைகார் இப்பகுதியுள்ள தாங்களும் ஆதீனத்தைச் சேர்ந்த சீடர்கள்தான் என்று கூறியதை ஸ்ரீலஸ்ரீ நவசிவாய சுவாமிகளின் வழித்தோன்றலாகவுள்ள நாங்கள் கேட்டு மகிழ்ந்து பெரிதும் பாராட்டுகின்றோம என்றும் கூறினார்கள்.

**நரிகள் அடர்ந்த காடாயிருந்து எடுத்தணிவயல் என்ற கிராமமாகிய வரலாறு:**

எடுத்தணிவயல் என்ற பெயர் ஏற்படுவதற்கு முன்பு இப்பகுதி நரிகள் அடர்ந்த பெரும் காடாகவும், வழிப்பறி கொள்ளையடிக்கக்கூடியதும், திருடர்கள் வாசம் செய்யக் கூடியதுமான அடர்ந்ததாகவும் இருந்து வநதது. இவ்விடம் ஆதீனத்துக்குச்சொந்தமான இடமாகவும் இருந்து வந்தது.

தற்சமயம் 21-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி ஞானச் செங்கோல் ஆட்சிபுரிந்து கொண்டு வரும் தவப் பெருந் திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் மேற்படி பகுதியைப் பார்வையிட்டு, பெரும் பொருள் செலவில் காடுகளை வெட்டிப் பூமியைச் சமப்படுத்தியும் பல பகுதிகளை நஞ்சை, புஞ்சை நிலங்களாகத் திருத்தியும், பாசனத்திற்கு வேண்டிய நீர்த்தேக்கங்கள், வாய்க்கால்கள், நீர் இறைப்புக்குழாய்கள் முதலியவைகள் அனைத்தும், மேலும் நிலங்களை சாகுபடி செய்வதற்காகப் பல மக்களுக்குக் குடியிருப்பு கூரைகளும் கட்டிக்கொடுத்து குடியேற்றம் செய்து வைத்தும் உள்ளார்கள்.

மேலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள இக்கிராமத்தில் மக்கள் வழிபாடுகள் செய்வதற்காகப் புதிதாக ஆலயம்கட்டி அதில் ஸ்ரீ பஞ்சாக்ஷரவிநாயகப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து 1956-ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் பெரும் திட்டத்தில் செய்துவைத்துமுள்ளார்கள். மேலும் இக் கிராமத்திற்கு மின்சார விளக்கு வசதிகளும் அமைத்துள்ளார்கள்.

தற்சமயம் ஸ்ரீ விநாயகப் பெருமான் கோயிலின் முன்பு பெரும் பொருள் செலவில் நூதன மண்டபம் ஒன்று அழகான முறையில் அமைத்து மண்டபத்தின் நான்கு பக்கச் சுவர்களில் விநாயகர், முருகப் பெருமான் இருவர்களின் பல அவதாரத் திருவுருவங்களையும் நடராசப் பெருமானின் தாண்டவக்காட்சிகளில் பல காட்சித் திருவுருவங்களையும் (75 காட்சிகள்) ஓவியங்கள் மூலம் உயர்ந்த முறையில் எழுதி அழகுபடுத்தி வைத்துள்ளார்கள்.

இக்கிராமப்பணிகள் அனைத்தும் தவப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் நேர் பார்வையிலேயே நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இக்கிராமத்தில் ''அக்கினி'' என்ற பெயரால் ஓர் நதியும் ஓடிக்கொண்டிருக்கின்றது.

இக்கிராமம் மாயூரம் — அரந்தாங்கி புகையிரதப் பாதையில், திருச்சிற்றம்பலம் என்ற நிலையத்திலிருந்து சுமார் 2½ மைல் தொலையிலுள்ளது. இக்கிராமம் ஆதீனத்திற்குச் சொந்தமான ஆளுடையார்கோயில் தேவஸ்தானத்திற்குச் சமீபமாகவும் அமைந்திருக்கின்றது.

நரிகள் அடர்ந்த காடாக இருந்த இப்பகுதியை மற்றக் கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாக தவப்பெருந்திரு. குருமகாசந்நிதானம் அவர்கள் அழகான முறையில் (மாடல்) கிராமமாக அமைத்துள்ளதைக் குறித்து இப்பகுதியில் உள்ள கிராம மக்கள் தவப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்களைப் பெரிதும பாராட்டுகின்றார்கள்.

இருதினங்களுக்கு முன்னர் சென்னை அரசாங்க அறநிலைய ஆணையாளர் திரு. எம். உத்தண்டராமபிள்ளை அவர்கள் தஞ்சைப்பகுதி உதவி ஆணையாளர் திரு. சோமசுந்தர தேசிகருடன் வந்து கிராமத்தையும், விநாயகர் கோயிலையும் பார்த்து மகிழ்ந்தனர்.

திரு. மா. பாலசுப்பிரமணியன்
''தினமணி'' நிருபர்


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
நிருப்பர்

Std 14



# தொழில் நுட்பக்கல்லூரி

( *SCHOOL OF TECHNOLOGY* )

யந்திர கைத்தொழிற் சமாசத்தாரால்
அமைக்கப்பெற்றது.

Established by
The Engineering & Industrial Company Limited.

1960 ம் ஆண்டு ஜனவரி 18ந் திகதி தொடக்கம் 52 வாரங்களுள்ள 4 கல்வித் தவணைகளில் பின்வரும் துறைகளில் கல்வி கற்பிக்கப்படும்.

(அ) மின்சார யந்திர வேலை (இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை). இங்கிலாந்து மின்சார யந்திர நிபுணர்கழகத்தார் நடத்தும் முதற்பகுதிப் பரீட்சைக்கு ஏற்றதாக இக் கல்லூரி வகுப்பைக் கணிக்கச் செய்தற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வானொலிக் கருவி வேலை (சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை )

(இ) அளத்தல் மட்டப்படுத்துதல் (அளப்புப் பகுதித் தலைவர் அதிகாரச் சீட்டு வழங்கும் பரீட்சை)

(ஈ) படம் வரைவோர் பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு, அளப்புப் பகுதித் தலைவரின் உத்தரவுபெற்ற படம் வரைவோர் அதிகாரப் பரீட்சை.

(உ) பி. எஸ். சி. (Econ.) முதல் வருடம் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு இகொனமிக்ஸ் (பொருளாதாரம்) 3 கல்வித தவணைகள் (இலண்டன் சர்வகலாசாலைப் பரீட்சை)

எஸ். எஸ். சி. அல்லது அதை ஒத்த வகுப்பிற் படித்த மாணவரின் விண்ணப்பங்களே ஆலோசனைக்கு அங்கீகரிக்கப்படும்.

விடுதி ஒழுங்கு இருக்கின்றது.

பத்திரங்கள், விளக்கப் புத்தகங்கள் பிறவிபரங்கள் என்னிடமிருந்து பெறலாம்.

த. சிற்றடல்
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

விக்ரர் ஜே. இராசையா
தலைமை ஆசிரியர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தமிழ் இராசசியம் வேண்டும்

### முத்தமிழ் விழாவில் அறிவுரை

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் முத்தமிழ் விழா மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது, தமிழ்மொழி முன்னேற்றமுற வேண்டுமாயின் தமிழ்ராஜ்யம் இன்றியமையாததாகும். பண்டைக் காலத்தில் தமிழ்வேந்தர்கள் தமிழ் மொழியைப் போற்றி வந்தனர். ஆனல் இக்காலத்தில் அப்பொறுப்பு தமிழ் மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது. நம் தமிழ்மொழி வளர்வதற்கு சுய ஆட்சி மிகவும் அவசியம். ஆகவே தமிழ் மக்கள் சுய ஆட்சியை நிறுவுவதற்கு ஒன்றுபடல் வேண்டும். இதற்கு இதுபோன்ற தமிழ் விழாக்கள் மிகவும் பயன்படும். தமிழ் விழாக்கள்மூலம தமிழ்மக்கள் ஒன்றுபட்டுத் தமிழ் மொழியை வளர்க்க முடியும். தமிழை வளர்ப்பது தாய்மார்களே இவ்விழாவிற்கு ஏராளமான தாய்மார்கள் வந்திருப்பது கண்டு மகிழ்வுறுகிறேன். உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்த விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது திரு. வீ. ஏ. கந்தையா அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

## தாய்க்குலத்தின் தலைகமையைப் பேணுவோம்

எல்லாப் பிறவிகளிலும் மேலான மனிதப்பிறவியை மாண்புடன் வாழச் செய்வதற்காகவே "இருகண்கள்" போன்ற ஆணையும் பெண்ணையும் ஆண்டவன் இவ்வுலகில் படைத்தான். அந் நோக்கத்திற்கு நேர்மாருக இன்று நடப்பது பஞ்சமா பாதகங்களோடு கூடிய கொடிய வாழ்க்கையே. இக்கொடிய வாழ்வில் இன்னல்களுக்குள் ஆள்ானவள் தாய்க்குலத்தவள். தாய்க்குலத்தின் பரிதாப நிலையைக்கண்ட ஆண்கள் அவர்களுக்கு விமோசனம் அளிக்க முன்வருகிருர்களா? வீர புருஷர்களை உலகிற்கு அளிக்கவல்ல தாய்க் குலத்தை இழிவு படுத்தினல் மனிதகுலம் மாண்புடன் வாழுமா?

மனிதனை மாண்பு பெறச் செய்யும் தாய்க் குலத்தைப் பேணி நடவாத காரணத்தினலேதான் பல நாடுகள் சீரழிந்த நிலையில் காட்சியளிக்கின்றன என்பது 'கண்கூடு'. ஆண்கள் ஆளப் பிறந்தவர்கள் என்ருல் பெண்கள் பேணப் பிறந்தவர்கள். அனைவருக்கும் நல்வழி காட்டிகளாய் இருப்பவர்கள் தாய்க் குலத்தவர்கள். மோட்சத்திற்கு வழி காட்டும் தெய்வ அடியார்களையும், வாழ்வை வளம்படுத்த முன்வரும் வீர புருஷர்களையும், புதுப்புது விந்தைகளைச் செய்து காண்பிக்கும் விஞ்ஞானிகளையும் ஈன்று தருபவள் பெண்ணே. இத்தகைய தாய்க்குலத்துக்கு மாசு கற்பிக்கப் 'பருந்துபோல்' வட்டம் இடும் கயவர் கூட்டம் அனேகம்.

உலகிலே நல்வழி காட்டிகளாய் விளங்கிய ஔவை, கண்ணகி, சாவித்திரி போன்ற மாண்புமிக்க திலகங்களின் சீரிய போக்கை நன்குணர்ந்த மக்கள் ஏன் அத்தகையோர் வழி வந்தவருக்குத் தீங்குசெய்ய முன்வருகிருர்கள். மாதர் மாணிக்கங்களை நாம் போற்றிப் பேணி நடக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை மலர்ச்சியுறும்.

பண்டுதொட்டுத் தாய்க் குலத்தைப் பூரண உரிமையற்ற அடிமைகளாய்ப் பாவித்து வந்தவர்கள் பலர், அத்தகைய மக்களுக்கு நல்வழி காட்டப் பல மகான்கள் தோன்றினர்கள். எட்டியபுரத்திலே அமரகவி பாரதியார் தோன்றிப் பெண்களின் பூரண விடுதலைக்காகப் பாடுபட்டார். அன்னரின் அயரா உழைப்பால் பெண்கள் ஓரளவுக்கு விடுதலையடைந்துள்ளார்கள். அவர் வழியில் நின்று நாம் அனைவரும் தாய்க் குலத்தின் அடிமைவாழ்வை இன்னல் பல மலிந்த வாழ்வை — நல்வாழ்வாக விளங்கச் செய்து வாழ்வது எங்கள் தலையாய கடன்.

வாழ்க தாய்க்குலம்!
வளர்க மனிதப்பண்பாடு!!

திரு. இ. நா. தியாகராசா,
சரவணை.

## அப்படி ஒன்றும் இல்லை

சமஷ்டிக் கட்சித் தலைவர் ஆங்கில தினசரியில் வெளியிட்ட அறிக்கையிலே சுதந்திரக் கட்சியுடன் சமட்டிக் கட்சி எந்த விதமான ஒப்பந்தமும் செய்யவில்லை என்று கூறியிருக்கின்ருர். மூன்று அம்ச ஒப்பந்தம்உருவானதுஎன்ற செய்தி உண்மையானதல்ல என்றுகாட்டியிருக்கின்ருர்.

## இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையிற்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சென்று அவற்றைச் சீனத்தில் மொழிபெயர்த்தனர். சில புதிய நூல்களையும் அவர்கள் சீன மொழியில்எழுதினர் கி. பி. 401இல் சீனவுக்குச்சென்ற குமாரவிசயர் என்னும் இந்தியர் நாற்பத்தேழுநூல்களைச் சீனமொழியில் எழுதினர் அவை இன்றும் இருக்கின்றன. சீனகுப்தர் என்பவர் ஆறும் நூற்ருண்டின் பிற்பகுதியில் முப்பத்தேழு சமஸ்கிருத நூல்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்தார்.

பல சீன யாத்திரிகர்களும் இந்தியாவுக்கு வந்தனர். இவர்களில் மிகவும் புகழ் பெற்றவர்கள் பாகியன், சுங்யுன ஹியன் திசாங், இத்சிங் என்போர். பாகியன் ஐந்தாம்நூற்ருண்டின் முற்பகுதியில் இந்தியாவை அடைந்தான், இவன் சீனவிலிருந்த குமாரசீவா என்பவரின் மாணவன். இவன் பாடலிபுரத்திலிருந்த பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருன். ஹியன்திசாங் என்னும் சீன யாத்திரிகன் ஏழாம் நூற்ருண்டில் இந்தியாவுக்கு வநதான். அக்காலத்தில் வடநாட்டில் ஹர்சவர்தான என்னும் அரசன் ஆட்சிபுரிந்தான். ஹியன்திசாங் கோபிவனந்தரம் வழியாக வந்து இமயமலையைக் கடந்து இந்தியாவை அடைந்தான் இவன் நாலந்தாப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருன். நாட்டின் பலபாகங்களிலிருந்து பலர் கல்வி பயில்வதற்கு இங்கு சென்றனர். இக் கலாசாலையில் மாணவரும் குருமாருமாக பத்தாயிரம் பேர் இருந்தார்கள். ஹியன்திசாங் சட்டப் பேராசிரியர்ப் பட்டம் பெற்று அக்கலாசாலையில் உதவித்தலைவராகக்கடமையாற்றினன். அவன் சி-யு-கி என்னும் நூல் எழுதியுள்ளான், அந் நூலில் இந்தியாவைப்பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

ஹியன்திசாங் பலகையெழுத்து நூல்களுடன் வந்த வழியே சீனவை அடைந்தான். சீனவை அடைந்ததும் அவன் தான் கொண்டு சென்ற நூல்களிற் சிலவற்றைச் சீன மொழியில் மொழிபெயர்த்தான். இவன் மரணமடைந்தபின் இத்சிங் என்னும் சீன யாத்திரிகன் இந்தியாவை அடைந்தான். இவன் 671-இல் பிரயாணத்தைத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் பிரயாணஞ் செய்தபின் இந்தியாவை அடைந்தான். இவன் இந்தியாவுக்குச் செல்லும் வழியில், சமஸ்கிருதம் பயில்வதற்காகச் சுமத்திராவிலுள்ள சிறீபோகா என்னுமிடத்தில் சில காலம் தங்கினன். அக்காலத்தில் பாரசீகம், இந்தியா, மலாயா, சுமத்திரா முதலிய நாடுகளுக்கு மரக்கலப் போக்குவரத்துக்கள் ஒழுங்காக நடைபெற்றன. இத்சிங் என்பவனும் நாலந்தாக் கலாசாலையில் பல ஆண்டுகள் கல்விகற்றபின் பல நூறு கையெழுத்து நூல்களுடன் சீனவுகு மீண்டான்.

இந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சியடைந்ததும் இந்தோ சீனத்துக்கு இந்திய அறிஞர் செல்லுதல் நின்றுவிட்டது. இடையிடையே சீனவிலிருந்து யாத்திரிகர்கள் பௌத்த புண்ணிய தலங்களைத் தரிசிக்க வந்தனர்.

தென்னிந்திய அரசர் ஒருவரின் புதல்வனும், பௌத்த குருவுமாகிய போதிதருமர் என்பவர் தமது முதுமைக்காலத்தில் இந்தியாவினின்றும் கடல் வழியாகப் பயணஞ் செய்து காண்டனை கி. பி. 526-இல் அடைந்தார். அக்காலத்தில் உலோயாங் என்னும் ஒரு மாகாணத்தில் மாத்திரம் மூவாயிரம் பௌத்த குருமாரும் பத்தாயிரம் இந்திய குடும்பத்தினரும் இருந்தார்கள், (வளரும்)

### வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தேர்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மகோற்சவம் நனகு நடைபெற்று, சனிக்கிழமை 9-4-60 ல் தேர்த்திருவிழா வழக்கம்போற் சிறப்பாக நடைபெற்றது. அடியார்கள் பெருந்தொகையினர் வழிபாடாற்றி இன்புற்றனர்.

## அறிவித்தல்

25-3-60 ஆம் திகதியில் வெளிவந்த இந்துசாதனத்தில் திரு. க. வேலாயுதர் என்பவர் சுளிபுரம் பறுளையில் எழுந்தருளியிருக்கும் சண்முகப்பெருமானுக்கு இலட்ச அர்ச்சனை நடைபெறும் என்பதாக அறிவித்துள்ளார், அவ் அறிவிப்பில்தானே கோயில் சுப்ரின்டெடும், மனேச்சரும் என்று அறிவித்துள்ளார். இவ் அறிவிப்பு மிகப் பிழையானது. எவ்வாறெனில் மேற்படி கோயிலை ஸ்தாபித்தவர் சேதுகாவல முதலியாராவர். இவரின் பேரப்பிள்ளைகளே அம்பலவாண முதலியார், மநுநீதிவல்ல முதலியார், (மணியகாரன்) செங்காரபிள்ளை ஏன்பவராவர். இவர்களில் மநுநீதிவல்ல முதலியாரே அக்கோயிலை மீண்டு புதுக்கித்தவர். இவருக்கு மகப்பேறில்லை. செங்காரபிள்ளைக்கு ஆண்சந்ததியில்லை, அம்பலவாணருக்கே ஆண் சந்ததி உண்டு. அவ் ஆண்வழியில் 25-3-60 இல் அறிவித்தல் கொடுத்த திரு. வேலாயுதர் சேரவில்லை. திரு. வேலாயுதர் என்பவர் செங்காரபிள்ளையின் பெண் சந்ததியில் வந்தவராவர், வேலாயுதரின் தந்தையாராகிய கதிரேசர் சேதுகாவல முதலியாரின் சந்ததியில் சேர்ந்தவரல்ல. ஆகவே கோயில் ஸ்தாபகரான சேதுகாவல முதலியாரின் பேரனும் மீண்டும் அக்கோயிலைப் புதுப்பித்தவருமான மணியகாரன் எனப்படும் மநுநீதிவல்லப முதலியாரின் சகோதரனும் ஆக விளங்கும் அம்பலவாண முதலியாரின் ஆண் வழியில் வந்த முத்துக்குமாரு அழகக்கோனுகிய நானே கோயிலின் சகல உரிமைகளுக்கும் உரியேன் என்பதைச் சைவ அன்பர்களுக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்,
சுழிபுரம்    மு. அழகக்கோன்,

M 12 22—4—60

## இராமகிருஷ்ண மட ஆதரவில் அந்தர் யோகம்

கொழும்பு பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவிலில் (123, காலிரோட், பம்பலப்பிட்டி) மே மீ 6, 7, 8-ம் திகதிகளில் அந்தர்யோகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன

அவ்வமயம், ஸ்ரீமத் சுவாமி சித்பவாநந்தஜி மகராஜ், (தலைவர், ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன தபோவனம் திருப்பாராய்த்துறை, திருச்சி,) அவர்களின் தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். இத்தருணத்தில் பக்தர்கள் யாவரும் கலந்து பயனடையுமாறு வேண்டிக்கொள்ளுகிரோம்.

இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்களுககு சாப்பாடு வசதிகள் செய்யப்படும். இதில் பெண்களும் பங்கு பெறலாம், 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வருபவர்களும் இதில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்கள்.

இதில் கலந்துகொள்பவர்கள், தலைககு ரூபா. 10-00 முன்பணமாக ஏபரல் மீ 30 ம் திகதிக்குள் இராமகிருஷ்ண மிஷன், இராமகிருஷ்ண வீதி, கொழும்பு என்ற விலாசததிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### குறிப்பு

உபந்நியாசங்கள்:—யோகம், பக்தி, ஞானம், கர்மம், தேவாரம், திருவாசகம் முதலியவை [illegible]

வினவிடை:—தங்கள் சந்தேகங்களைக் கேட்டு நீக்கிக்கொள்ளலாம்.

6-ம் உ வெள்ளி: மாலை 6 15 பக்தர்கள் கூடுதல், 6 25 — 6 45 ஆலயவழிபாடு, 6 45—7 00 தியானமும், பஜனையும், 7 00 — 8 00 உபந்நியாசம், 8 00—9 00 இரவு சாப்பாடு, 9 00 — 10 30 வினவிடை, —10 30 நித்திரை.

7-ம் உ சனி காலை 5 00—5 45 காலைக்கடன் முடித்தல், 5 45 — 6 30 தியானமும், பஜனையும், 6 30—7 30 ஸ்நானம், 7 30 — 7 45 தியானம், 7 45 — 8 30 தேனீர். 8 30 — 10 30 உபனியாசம், 10 30 —11 30 மௌனம், 11 30 — 12 00 ஆலய வழிபாடு, 12 00 — 2 30 போஜனம், ஓய்வு.

மாலை 2 30 — 4 00 உபன்யாசம், 4 00—4 30 தேனீர், 4 30—5 30 கூட்டுப் பிரார்த்தனை, 5 30 — 6 30 ஓய்வு, 6 30 — 7 00 ஆலய வழிபாடு, 7 00—7 30 தியானம், 7 30—8 30 இரவு சாப்பாடு, 8 30 — 10 30 வினவிடை, — 10 30 நித்திரை.

8-ம் உ ஞாயிறு காலை 5 00 — 2 30 நேற்றையதின நிகழ்ச்சிகள் போல் நடைபெறும்.

மாலை 2 30—3 00 பஜனை 3 00 — 4 00 புத்தகம் வாசித்தல், 4 00 —4 30 மௌனம், 4 30 — 5 00 தேனீர், 5 00 — 6 15 உபன்யாசம் — 6 15 பக்தர்கள் வீடு செல்லுதல்

கொழும்பு இராமகிருஷ்ண மடம் ஸ்ரீ சுவாமி பிரேமாதமாநந்தா உபதலைவர் அவர்கள் மேற்கண்டவாறு அறியத் தருகின்ருர்கள்.

### நெல் உத்தரவாத விலை

அரசாங்கப் பங்கீட்டரிசி விலை 25 சதமாய்க் குறைக்கப்பட்டமையால் நெல் உத்தரவாத விலையும் குறைக்கப்படலாமென்று சிலர் கருதுகின்றனர். ஆனல் அவ்வித மாற்றம் செய்யப்படமாட்டாது. நெல் உத்தரவாத விலை தொடர்ந்து பன்னிரண்டு ரூபாவாகவேயிருக்கும் என்று விவசாய உணவு மந்திரி ஸ்ரீ எம். டி. பண்டா கருத்து வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுநாயத்தின் எதிர்...

முதற்பக்கத் தொடர்ச்சி )

நமது சமயம்விசாலம் அடைய வேண்டும். சுயநலமின்றி உள்ளத் தூய்மையுடனும் சமரச நோக்குடனும் தொண்டாற்ற வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்து மாணவர் சமாசச் சார்பில் திரு. எஸ். யு. சோமசேகரமவர்கள் தலைமையில் நாவலர் மண்டபத்தில் நடந்த கூட்டத்திற் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர் ஸ்ரீ சுவாமி சத்தியானந்தா அவர்கள்.

வித்தியாதிகாரி திரு. எஸ். யு. சோமசேகர மவர்கள் பேசும்போது சமஸ்கிருதம் எல்லாப் பாடசாலைகளிலும் கட்டாய பாடமாகப் படிப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

—

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு 415/A காங்கேசன் துறை வீதி க. நடராசா அவர்களின் அடைவு கடையில் 1-9-57 தொடக்கம் 28-2-59 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 1960ஸு மே மீ (வைகாசி) 20உ வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், மீட்கப்பட்ட நகைகள் புறநீங்கலாக மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவுகாரரும்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
643 காங்கேசன் துறைவீதி.
வண்ணார்பண்ணை,
20-4-60.

M 11, 22, 29-4-60.


## கைலஞ்சக் குற்றச்சாட்டில் மேலும் மூன்றுமந்திரிகள்

மந்திரிகள் ஸ்ரீ சி. ஏ. எஸ். மரைக்காயர், ஸ்ரீ. ஹென்றி அபயவிக்கிரம ஆகியோருடன் மந்திரிகள் ஸ்ரீ. ஏ. பி ஜயசூரிய, ஸ்ரீ. எம் பி. டி. சொயிசா, ஸ்ரீ. ஆர். ஈ ஜய திலக ஆகியோர்மீதும் கைலஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் பரிபாலன சபை

ஷெ சபையின் மூன்ருவது வருடாந்தக்கூட்டம சென்ற புதன்கிழமை (13-4-60) கோவில் மண்டபத்தில் நடைபெற்றது காரியதரிசி திரு. செ.சுபபிரமணியம வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். வரவு செலவு வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின் வருபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. கு. வைரமுத்து காரியதரிசி; திரு. செ. சுப்பிரமணியம், பஞ்சாயத்தார்: திருவாளர்கள், சே. வி. மயில் வாகனம், வை. விநாயக மூர்த்தி, இ மார்க்கண்டு மு. கணபதிப்பிள்ளை, சி. செல்லத்துரை

ஷெ சுவாமிபேரில் திருப்பதிகம் ஒன்று இயற்றிப் படிக்கப்பட்டது. சரவணையூர் திரு ஆ தில்லைநாதப்புலவர் இதைப் பாடினர் என்பது குறிப்பிடத் தக்கது. முருகன் திருவிளையாடல் என்னும் விடயம்பற்றி வேலணையூர் பண்டிதர் திரு. பொ. செகந்நாதன் ஓர் உபந்நியாசம் செய்தார்கள்.




## உடுவில் இந்துசமய விருத்திச்சங்க வருடாந்தக் கூட்டம்

மேற்படி கூட்டம் விகாரி வருடம் பங்குனிமாதம் 29-ந் திகதி (11-4-60) மாலை 6மணிக்கு வெட்டுக்கட்டைப் பிள்ளையார் கோவில் வீதியில் திருவாளர் வி. சி. சண்முகம் அவர்கள் தலைமையின்கீழ் கூடிறறு.

காரியதரிசியின் அறிக்கையும தனதிகாரியின் அறிக்கையும் வாசித்தபின்னர் புது வருட உத்தியோகத்தர்தெரிவு நிகழ்ந்தது பண்டிதர் த சிவ சம்புநாதர் அவர்கள் 'சக்தி வழிபாடு'' என்னும் விடயம் பறறி யாவரும் வியக்கும்படியாக சிறுர்களது உள்ளம் ததூகலம் அடையும்படி மிகுந்த ஆர்வத்தோடு ஓர் அரிய சொறபொழிவாற்றினர்கள் உபநிடதத்திலே பேசப்படும் ஓர் அரிய பெரிய அஷ்டாவக்கிரனுடைய கதையைக் கூறியது எவரும் வியக்கத்தக்கதாயிருந்தது.

வித்துவான் R. திருநாவுக்கரசு அவர்கள் "சமயமும் வாழ்க்கையும்'' பறறிச் சபையோர் வியக்குமாறு இன்னிசையுடன் கந்தரனுபூதி, தேவார திருவாசகங்கள் ஓதி யாவர் உள்ளத்தையும உருக்கும்படியாக நீண்ட நேரம சொற்பொழிவாற்றினர்கள், மனநடை, நாநடை, கால் நடை, விலங்கு மாக்கள், மக்கள் என மூன்ருக வகுத்துச் சிறுவர்களுக்கு வினவிடை மூலமாகத் தெளிவு படுத்தியது இங்கே வியந்து பாராட்டத்தக்கதா யிருந்தது நன்றியுரை கூறும்போது திரு. A கந்தசாமி கௌரவ காரியதரிசியவர்கள் பேச்சாளர்கள் இருவரையும பெரிதும் பாராட்டியதுடன் நம நாட்டு மக்களையும பாராட்டிச் சபையோருக்கு வணக்கம் தெரிவித்தார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர்: திருவாளர் V. C. சண்முகம் அவர்கள், உப தலைவர்கள்; திருவாளர்கள்: இசைப்புலவர் N. சண்முகரத்தினம், V. மயில் வாகனம், கௌரவ காரிய தரிசி: திரு. A. கந்தசாமி, தனதிகாரி: திரு. K.S. தம்பி ஐயா. நிர்வாகசபை; திருவாளர்கள், S. தெட்சணமூர்த்தி, K சிதம்பரநாதன, S திருநாவுக்கரசு, S. அரசரத்தினம, A. நல்லநாயகம், J. குலசிங்கம், M. கணேசமூர்த்தி, A. பொன்னப்பா, S. இளையதம்பி, M. கந்தசாமி.

—

## யாழ்ப்பாணம் முஸ்லிம் மகளிர் கல்லூரி

திங்கட்கிழமை 11-4-60 ல் நீண்டகாலம் எதிர்பார்த்திருந்த முஸ்லிம் மகளிர் கல்லூரியை வடபகுதி வித்தியாதிகாரி திரு. எஸ். யு சோமசேகரமவர்கள் திறந்து வைததார்கள்.

## நூதன ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமான் ஆலயம்

— கொள்ளிடம் ஏப் 6

ஓங்கார வடிவினராய், ஒளிப்பொருளாய், உன்னுவார் உன்னுவன யாவற்றையும் இடையூறு நீக்கி இனிது நிறைவேற்றும் எளிவந்த தெய்வமாக எழுந்தருளிக் கருணை வழங்குபவராகவுள்ளவர் ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமானே; ஆகவே பட்டுக்கோட்டை தாலுக்காவில் ஆதீனத்திற்குச் சொந்தமான நாட்டுச்சாலை என்ற கிராம மக்களுக்கு அருள் வழங்கிவரும் பொருட்டுப்பெருமபொருள் செலவில் நூதன ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான் ஆலயம் ஸ்தாபிதம்செய்து வைதது இன்று காலை 6-30 மணிககு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது பட்டம்குருமகாசந்நிதானம தவப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் மகாகும்பாபிஷேகத்தைச் சிறந்தமுறையில நடத்தி வைததார்கள.

கிராம மக்கள் பெருந்தொகையினர் கூடி தரிசனம் செய்துகொண்டு தவப்பெருந்திரு. குருமகாசந்நிதானம் அவர்களின் சிவப்பணியைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர்கள்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 22-4-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிஸ்கால் விற்பனை

இலக்கம்: 6299.

பிஸ்கால் ஆபிசில்
யாழ்ப்பாணம், 19-4-60.

பருத்தித்துறை டிஸ்றிக்ட்கோட்டில்
புலோலி கிழக்கு:- வேலப்பர் பொன்னையா, —வழக்காளி.

விரோதமாக

1. புலோலி கிழக்கு:- மாப்பாணர் வேலுப்பிள்ளை 2. புலோலி தெற்கு:- வல்லிபுரம் கந்தையா, 3. புலோலி கிழக்கு:- ஆள்வாப்பிள்ளை சதாசிவம் கைம்பெண் பறுபதி 5. புலோலி தெற்கு:- மயில்வாகனம் துரையப்பா பெண் திலகப்பிள்ளையும், 7. கணபதியர் சுப்பர் பெண் நாகமுத்து —எதிராளிகள்.

இதன்கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் 1-ம், 2-ம், 3-ம் 5-ம, 7-ம் எதிராளிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1960-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரசித்த வெந்திசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது.

ஆதன அட்டவணை:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட், வடமராட்சிப்பகுதி, பருத்தித்துறைக் கோவிற்பற்று, புலோலி கிழக்கு, மழவராயக் குறிச்சி இறை "குறும்பசிட்டி'' உறுதிப்படி நிலப்பரப்பு 2 குளி 8, 33/36-ம், அளவுப்படி நிலப்பரப்பு 3 குளி 1, 6/32-ம் அதைச் சேர்ந்தவைகளும். இது 1959-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதியில் உலாந்தா மேஸ்தர் வீ, சிவரததினம் அவர்களால் 1954-ம் இலக்கங்கொண்ட அளவுப்படத்தின்படி காண்பிக்கப்பட்டிருக்கின்றது. எல்லை கிழக்கு வேலப்பர் பொன்னையா பெண் சிதேவிப்பிள்ளையின் ஆதனம் வடக்கு வேலப்பர் பொன்னையா பெண் சிதேவிப்பிள்ளையின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும், மேற்கு தாமோதரம் பிள்ளை ஆறுமுகமும் மறுபருக்குமுரிய ஆதனம், தெற்கு வேலப்பர் பொன்னையா பெண் சிதேவிப்பிள்ளைக்குரிய ஆதனம்.

பெறுமதி ரூபா, 2223/88½.

மேற்கூறிய ஆதனம் முதலில் கூட்டுப்பங்காளருக்கு விற்பனவுக்கு விட்டு அவர்கள் வாங்கத்தவறின் பிரசித்த வெந்தீஸில் விற்கப்படும்.

P. Pakiyanathan
பொ. பாக்கியநாதன்,
பிரதிப் பிஸ்கால், யாழ்ப்பாணம்.

G. 1 22—4—60.

# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 24-4-60—30-4-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

வாரம் முழுதும் தேகசுகம் சிக்கலாயிருககும. நீர் விரைந்து கோபிபபீர். பணத்துறையில் நல்ல வாரம் பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

மனச்சமாதானமிருக்கமாட்டாது குடும்பச் சூழலில் சண்டைகளுககும், பிழை எண்ணங்களுக்கும இடமுண்டு. ஆனல் இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவுவார்கள், காணிகள்மூலம் இலாபங்கள் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். உம்முடைய சொந்ததுன்பங்களுட் சில அற்றுப்போகும். வழககத்திலும் வேலை கூடுதலாயிருக்கும், ஆனல் போதிய பதிலுபகாரம் உமககுத் தரப்படும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்த வாரம் அதிக புகழ் ஈட்டுவீர். சமூக சித்திககும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**சிங்கராசி** மகம், பூரம். உததரம் 1-ம் பாதம்.

இந்த வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு குடும்ப சமாதானமும் சிறிதுமிருககமாட்டாது. ஆனல் பணத்துறையில் நல்ல வாரம். வாரததின் முதல் நாளைக் கவனமாய்க்கழிக்கவும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

மூன் அரைவாரம் தொந்தரவானதாயிருக்கும். செவ்வாய் புதன் காலை கவனமாய்க் கழிககவும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருககும்

**[illegible]**, சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

மூன் அரை வாரம்புதுக்கருமங்களுக்கு நல்லாயிருக்கும். தனலாபங்கள் நிச்சயம். ஆனல் புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும். கடைசிநாள் திரும்பவும் நன்ருகும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத் துறையில் நல்லவாரம். பகைவர் அழிவும் புதுக் கருமங்களிற் சித்தியும் நிச்சயம். ஆனல் சிறிதுகாலத்துக்கு இனத்தவர்களுடன் உம்முடைய கருமங்களில் கவனமாயிருக்கவும். வாகன நட்டங்களுக்கும் இடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

தேக சுகம் இந்த வாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனல் சித்தியாகும். சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

நீர் இந்த வாரம் சண்டை தொடக்க முந்துவீர். கண் நோய்களுக்கிடமுண்டு. பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபம் மூட்டுவர் உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிருக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இந்த வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு குடும்பக்கருமங்களும் திருத்தியாயிருக்கமாட்டா. பணத்துறையில் நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பர்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நீர் சித்தியடைதற்கு இந்த வாரம் முயன்றுழைக்க வேண்டும். செலவதிகரிக்கும். உம்முடைய முயற்சிகளில் பல இடைஞ்சல்களுண்டாகும். ஆனல் அவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும்,